கிறிஸ்தவ கவியரசர்

மகாவித்துவான்

எச்.ஏ.கிருஷ்ணபிள்ளை

நினைவுவிழா

02.02.2002

"கடவுள் என் இதயத்தைத் திறந்தார்
நான் அவரைத் துதிக்க என் வாயைத் திறந்தேன்"

- H.A.K

தலைவர்

பேராயர் அறிவர் எஸ். ஜெபநேசன் அடிகளார்

இடம்

உடுவில் மகளிர் கல்லூரி மண்டபம்

கிறிஸ்தவ குருத்துவக் கல்லூரி

மருதனார் மடம்

சுன்னாகம்

கிறிஸ்தவ கவியரசர்
எச்.ஏ. கிருஷ்ணபிள்ளை
நினைவு விழா

02.02.2002

நிகழ்ச்சி நிரல்

தலைவர்

பேராயர் அறிவர் எஸ். ஜெபநேசன் அடிகளார்

இறைவணக்கம் :	சகோ. J. தாவீது அவர்கள்
பாடல் :	திருமதி ஜீவா இரத்னசபாபதி
கவியரசரின் புகைப்படம் திரை நீக்கம் :	பேராயர்
மங்கள விளக்கேற்றல் :	
விழாப்பாடல்	உடுவில் திருச்சபை - பாடகர்குழு
வரவேற்புரை :	உயர்திரு. C.B. பவின்க்
ஆசியுரை :	செல்வி அறிவர் C.V.செல்லையா அவர்கள்
தலைமை உரை:	பேராயர் அவர்கள்
கவியரசர் பாடல்கள் :	செல்வி மில்கா இரத்னசபாபதி
சிறப்புரை :	திருவாளர் P. அருந்தவநாதன் (விரிவுரையாளர் - யாழ் கல்லூரி.)
கவியரசர் பாடல்கள் நிறைவுரை:	குருத்துவக் கல்லூரி இசை மன்றம் அருட்தந்தை டி.ஆர். அம்பலவாணர் அடிகளார்
நன்றியுரை :	சகோ. ஜீ. றொபின்சன்
கல்லூரிக் கீதம் :	(யாவரும் எழுந்து நின்று பாடுக)

இறை ஆசி வழங்கல்

கிறிஸ்துவ கவியரசர்

எச். ஏ. கிருஷ்ணப்பிள்ளை

நினைவு விழாப்பாடல்

இராகம் : ஹம்சானந்தி

தாளம் : ஆதி
(சதுஸ்ரம்)

கண்ணிகள்

1. கிறிஸ்தவ கம்பன் கிருஷ்ண பிள்ளை - அருள்
கவித்தமிழ் சொரிந்தான் பக்தி யொடு
கிறிஸ்தவ கவிதை பலபு னைந்தான் - இயேசுக்
கிறிஸ்தவ பாதமலரை சரணடைந்தான்.

2. இரட்சண்ய யாத்திரிக காப்பியந் தந்தான் - அவன்
இரவு பகல் வேதா கமம் படித்தான்
இரட்சண்ய முத்திரையை அவன் பதித்தான் என்றும்
இயேசுக் கிறிஸ்துவையே அவன் துதித்தான்

3. பாவாரம் சூட்டித் தமிழ் பாடிநின்றான் - கவி
பாட்டிலே தமிழ்ச் சுவை கூட்டி நின்றான்
தேவாரம் போல ஆகமங்கள் - சாரம்
தீந்தமிழ் தேன் இனிமை ஒழுகத் தந்தான்

4. இறையியல் கருத்தாழம் காட்டி நின்றான் - அவன்
இன்பத் தமிழ் அமுதில் ஊட்டி வைத்தான்
நிறையுறும் கிருஷ்ண பிள்ளை தரும் சேவை - நாமே
நிலத்தினில் உளமார செய்திடுவோம்.

நற்செய்திப் பாவேந்தர்

எச். ஏ. கிருஷ்ணபிள்ளையின்

வாழ்க்கைக் குறிப்பு

பிறப்பு : ஏப்பிரல் 23, 1827

பெற்றோர் :

தந்தை : சங்கரநாரணயர்

தாய் : தெய்வநாயகி அம்மையார்

சமயம் : வைணவம்

குலம் : வேளாளர்

பிறப்பிடம் : கரையிருப்பு, திருநெல்வேலி மாவட்டம்

திருமணம் : 14ஆம் வயதில் 9 வயதுள்ள முத்தம்மாள் என்ற சிறுமியை திருமணம் செய்வித்-தனர்.

கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தல் :

தமது பதினெட்டாம் வயதில், நல்லூர் என்ற இடத்தில் வசித்த கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தினார்.

பாளையங்கோட்டை :

நல்லூர் நிகழ்ச்சியின் விளைவாக 1845 இல்; பாளையங் கோட்டையில் குடிபுகுந்தார். இங்கிருந்த காலத்தில் இவரும் தம்பி முத்தையாப்பிள்ளையும் தமிழ்ப் புலமை மிக்கவராயினர். திருப்பாற்கடனாத கவிராயரிடம் கல்வி பயின்றனர்.

தமிழாசிரியர் :

1853இல் சாயர்புரம் திருமறைக் கல்லூரியில் தமிழாசிரியரானார். பேராயர் டாக்டர் கால்டுவெல் இவரைத் தேர்வில் தேர்ந்தெடுத்து இப்பணியில் அமர்த்தினார்.

சென்னையில் :

சாயர்புரத்தில் பணியாற்றி வந்த போது இயேசு பெருமானால் தடுத்து ஆட்கொள்ளப்பட்டார். - பின்னர், ஞானஸ்தானம் பெறுவதற்காக 1857இல் சென்னைக்கு வந்தார். - சென்னையில் இருந்த போது "தினவர்த்தமானி" என்ற பத்திரிகைக்கு துணையாசிரியராகவும் - மாநில உயர்நிலைப் பள்ளித் துணைத் தமிழ்ப் பண்டிதராகவும் சிலகாலம் பணியாற்றினார். ஆங்கிலத் தமிழ் அகராதித் தொகுப்பாளரான வண. பீட்டர் பெர்சிவல் அவர்களின் கீழ் இங்கு பணியாற்றினார் - ஐயர் அவர்களுக்குத் தமிழாசிரியராகவும் இருந்தார்.

ஞானஸ்தானம் :

1858இல் ஏப்ரல் 18ஆம் நாள் - தமது முப்பதாம் வயதில், மைலாப்பூரில் உள்ள - தூய தொமஸ் தேவாலயத்தில் ஞானஸ்தானம் பெற்றார்.

இது முதல் ஹென்றி அல்பிரெட் கிருஷ்ணபிள்ளை, என்று அழைக்கப்பட்டார். - எச். ஏ. கிருஷ்ணபிள்ளை என்பது பெருவழக்கு.

மீண்டும் பாளையங்கோட்டையில் :

சென்னையில் ஞானஸ்தானம் பெற்றபின் - கிருஷ்ணபிள்ளை பாளையங்கோட்டைக்குத் திரும்பினார். - கவிஞரின் குடும்பத்தினரும் கிறிஸ்தவர்களாயினர். - இவருடைய தம்பி முத்தையாபிள்ளை, இவருக்கு முன்னதாகவே கிறிஸ்தவராயினர். 1860 அளவில் 'இரட்சணிய சரிதம்' என்னும்

காப்பியம் பாடத் தொடங்கினார். அது நிறைவு பெறவில்லை. 1864 - 1875 வரையில் கிருஷ்ணபிள்ளை சாயர்புரம் கல்விச் சாலையில் மீண்டும் பணியாற்றினார் - 1865இல் வேதமாணிக்க நாடார் இயற்றிய - "வேதப்பொருள் அம்மானை" என்னும் நூலைப் பதிப்பித்தார். - 1876இல் பாளையங்கோட்டைச் சபைத் திருத்தொண்டர் கழகத்தினர் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியரானார் - இக் காலத்தில் கிருஷ்ணபிள்ளை குற்றாலத்திற்கு அருகில் ஒரு கோப்பித்தோட்டம் ஒன்றை அமைத்து, நடத்தி வந்தார். 1878இல் இராட்சணிய யாத்திரிகம் பாடத் தொடங்கினார்.

திருவனந்தபுரத்தில் :

1886இல் - திருவனந்தபுரம் மகாராசர் கல்லூரியில் தலைமைத் தமிழ்ப் பேராசிரியரானார். இக் காலத்தில் மனோன்மணியம் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை இங்கு தத்துவப் பேராசிரியராய் விளங்கினார். சுந்தரம்பிள்ளை மனோன்மணியம் இயற்றிவந்த இதேகாலத்தில் கிருஷ்ணபிள்ளையும் இரட்சணிய யாத்திரீகம் இயற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

குலசேகரன் பட்டினம் :

1890ஆம் ஆண்டின் தொடக்கத்தில் திருவனந்தபுரத்தை விட்டு குலசேகரன் பட்டினத்திற்கு வந்து - 1891ஆம் ஆண்டு வரையில் உப்பு உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டார்.

இலக்கியத் தொண்டு :

1892 - 1900 வரையில் (தனது வாழ்நாள் இறுதி வரை) கிறிஸ்தவ இலக்கிய சங்கத்தின் தமிழ்ப் பகுதியில் ஆசிரியராய்த் தொண்டாற்றினார். இக்காலத்தில் இவருடைய நூல்கள் பல வெளிவந்தன. 1892 அளவில் இரட்சணிய யாத்திரிகம் பாடி நிறைவு செய்யப்பட்டது.

மறைவு :

03.02.1900 மகாவித்துவான் கிருஷ்ணபிள்ளை அவர்கள் இறைவனடி சேர்ந்தார்.

சமகாலப் புலவர்கள் :

கவிஞர் கிருஷ்ணபிள்ளை வாழ்ந்த காலத்துப் புலவர்கள்.

1. வேதநாயக சாஸ்திரியார் (கி.பி. 1774 - 1864),
2. நீதிபதி வேதநாயகம்பிள்ளை (கி.பி. 1815 - 1876)
3. பேராசிரியர் ராவ்பகதூர் சுந்தரம்பிள்ளை (கி.பி 1855 - 1897)

கிருஷ்ணபிள்ளையின் நூல்கள் :

பதிப்பு :

1. வேதப்பொருள் அம்மானை
2. பரதகண்ட புராதனம் என்ற நூலின் ஆசிரியர் டாக்டர் கால்டுவெல் ஐயர்.

தொகுப்பு :

'காவிய தரும சங்கிரகம்'

இயற்றிய நூல்கள் :

உரைநடை :

1. இலக்கண சூடாமணி (1883)
2. 'தாம் கிறிஸ்தவனான வரலாறு' - (1893) இது 1977இல் முதன் முதல் தமிழில் அச்சானது
3. இரட்சணிய சமய நிர்ணயம் (1898)

செய்யுள் :

1. இரட்சணிய யாத்திரிகம் (1894)
2. இரட்சணிய மனோகரம் (1899) 1878 இல் இரட்சணிய மனோகரத்தின் ஒரு விரிவான பதிப்பு வெளிவந்துள்ளது.

3. 'போற்றித்திரு அகவல்' (1884) - இது விளக்கவுரை-யுடன் 1977இல் மதன் முதலில் வெளியிடப்பட்டது.
4. 'இரட்சணிய சரீதம்' (1861)

கிட்டாத நூல்கள் :

1. இராட்சணியக்குறள்
2. இரட்சணிய பாலபோதனை

♠♠♠♠♠

சிலுவைச் செழுங்கோலம்

1. கள்ளமுறுங் கடையேனுங் கடைத்தேறப் பெருங்கருணை
வெள்ளமுகத் தருள்பொழியும் விமலலோ சனநிதியை
உள்ளமுவப் புறுதேனை யுயர்க்குயீரை யுலவாத
தெள்ளமுதைத்தீங்கனியைச் சிலுவைமசை கண்டேனே

2. படிசாய்த்த பெரும்பாவப் பரஞ்சுமந்து பரமர்திரு
படிசாய்த்த திருமேனி வதைந்திழிசெங் குருதியுக
முடிசாய்த்த பெருமானை முதலகை தலைநசுக்கிக்
கொடிசாய்த்த கொற்றவனைக் குருசின்மிசைக் கண்டேனே

3. பொயத்திருக்கும் வஞ்சனையும் பொல்லாங்கும் புறங்கூற்றும்
எத்திருக்கு முடையேமை யெண்ணியொரு பொருட்டாகப்
பத்திருக்கும் பிராமணப்படியொழுகி வினைமுடித்த
சித்திரக்கும் செழுந்தவனைச் சிலுவைமிசைக் கண்டேனே

4. மூவாத முதலவனை முதுசுருதி மொழிப் பொருளை
ஓவாத பெருங்குணத்த வுத்தமனை யுலகனைத்தும்
சாவாத் படிகாக்கத் தருவெடுத்துத் துஜங்கட்டுந்
தேவாதி தேவனையான் சிலுவைமிசைக் கண்டேனே

இறையியல் கல்லூரிக் கீதம்

இராகம் : பிரிந்தாவன சாரங்கா

பல்லவி

இறையியல் கல்லூரி வாழ்க என்றும்
இறைமகன் இயேசு கிறிஸ்து
ஒளி உலகினில் சூழ்க

அனுபல்லவி

மறை வேதாகமம் பயில்
மருதனார் மடத்தூரில்
நிறைவு தந்தே தெய்வீகம்
நித்தம் அருள் அன்னையான

சரணம்

1. இறை அன்பு விதைத்திட
மறை மழை தரும் மேகம்
இறை மகன் கருணையை
இதயத்தில் நல்கும் போதம்
இறையியல் ஆகம
நெறி உணர்த்திடும் வேதம்
இறைவன் அருளிய
இகத்தில் எம் பிரசாதம்

2. விருப்பமுடனே இறை
இயல் பயில் உணர்வுகள்
திருப்பணி செய்வதந்தே
தினம் வழி காட்டிடும்
பரப்பும் கிறிஸ்து ஒளி
பாரினில் பிரகாசிக்கும்
உருப் பெறும் உன்னதரின்
ஊழியரை உருவாக்கும்.

கங்கை பிறின்டேர்ஸ் (ஒவ்செற்) 166/1 நாவலர் றோட்
(பிறவுண் வீதிக்கு அருகாமையில்) யாழ்